**உடுமலைப்பேட்டை நகராட்சி**

**04.01.2019 ம் தேதிய அவசரக்கூட்ட மன்ற நிரல்**

| Sl No | MCR No | Subjects in Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 1 | 792 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்ட பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்று தற்சமயம் நகராட்சி மூலம் வீட்டு இணைப்புக் குழாய்கள் கொடுக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட சாலைகள் அனைத்தும் வெவ்வேறு திட்டங்களின் கீழ் (Infra Gap Filling Fund, SRP, General Fund, TURIP) மறுசீரமைக்கும் பணியானது முடிவுற்றது. இந்நகராட்சியால் சீரமைக்கப்பட்ட சாலைகளில் ஆள்நுழை குழாய்கள் (Manholes) சாலைகளிலிருந்து மிகவும் உயரமாகவோ அல்லது தாழ்வாகவோ உள்ளதால் பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட சாலைகளில் உள்ள 1800 ஆள்நுழை குழாய்களை சாலையின் மட்டத்திற்கு அமைப்பதற்கு ரூ.40.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 16265/2018/இ1 நாள் 25.09.2019-ல் O & M Gap Filling Fund 2018-19 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண் 1599/2018/இ1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

(ஒப்பம்) ஒ. ராஜாராம்,
ஆணையாளர் / தனி அலுவலர்

**ஆணையாளர்**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**

**உடுமலைப்பேட்டை நகராட்சி**

**31.01.2019 ம் தேதிய சாதாரணக்கூட்ட மன்ற நிரல்**

| Sl No | MCR No | Subjects in Agenda | Decision of the council |
|---|---|---|---|
| **1** | 793 | உடுமலைப்பேட்டை நகராட்சி சர்வே வார்டு பி, பிளாக் எண். 36, நகரளவு எண். 55/2 ல் பேருந்து நிலைய விரிவாக்க பணிகளுக்காக பேருந்து நிலைய விரிவாக்கம் செய்யும் இடத்திற்கான அணுகு சாலைக்கான புல வரைபட நகல்கள், edcr அறிக்கையுடன் வரைபட நகல்கள் மற்றும் Topo Plan ( நிலையிலுள்ள அபிவிருத்திகள் குறிப்பிட்டும் மற்றும் Colour notatin of Master Plan / DD Plan நில வகைப்பாடு விபரங்கள் குறிப்பிடப்பட்டு) அனுப்பி வைக்க நகர் ஊரமைப்பு இயக்குநர் கோவை அவர்களின் 05.12.2018ம் தேதிய ந.க.எண். 10047/2018/கோம3, எண்ணிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டபடி வரைபட நகல்கள் மற்றும் Topo Plan நிலையிலுள்ள அபிவிருத்திகள் குறிப்பிட்டும் மற்றும் Colour notatin of Master Plan / DD Plan நில வகைப்பாடு விபரங்கள் தயாரித்து தர ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு 1.** அனுமதிக்கலாம்<br><br>2. இப்பணியினை உடன் செய்ய வேண்டி உள்ளதால் ஆணையாளரின் முன் அனுமதி பெற்று டெண்டர் கோரியுள்ளதை அனுமதிக்கலாம்.<br>ந,க.எண். 3283/2006/எப்1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **2** | 794 | இந்நகராட்சி பகுதிகளிலுள்ள 33 வார்டுகளில் பகிர்மான குழாய் அமைப்புகள் 113 கி.மீ நீளத்திற்கு அமைந்துள்ளது. மேலும் 120 எண்கள் எண்ணிக்கைகள் கொண்ட கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகள், 75 எண்கள் சிறுமின் விசை பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடன் சரிசெய்து சீரான குடிநீர் வழங்கப்படுவதுடன், ஆழ்துளை கிணறுகளின் கைபம்புகள் மற்றும் சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளையும் சரிசெய்து இயக்கத்தில் தொடர்ந்து இருக்குமாறு பேணப்பட வேண்டியுள்ளது. தற்போது இந்நகராட்சியில் குடிநீர் கசிவு பணிகளையும், ஆழ்துளை கிணறு பணிகளையும் உடன் அவ்வப்போது மேற்கொள்ள போதிய குடிநீர் பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், அதற்குண்டான உதிரிபாகங்கள் இல்லாத காரணத்தாலும் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு செவ்வனே பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே குடிநீர் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சி வார்டு எண்.1 முதல் 16 வரை உள்ள பகுதிகளில் ஏற்படும் மேற்படி குடிநீர் சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 128/2019/இ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **3** | 795 | இந்நகராட்சி பகுதிகளிலுள்ள **33** வார்டுகளில் பகிர்மான குழாய் அமைப்புகள் **113** கி.மீ நீளத்திற்கு அமைந்துள்ளது. மேலும் **120** எண்கள் எண்ணிக்கைகள் கொண்ட கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகள், **75** எண்கள் சிறுமின் விசை பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடன் சரிசெய்து சீரான குடிநீர் வழங்கப்படுவதுடன், ஆழ்துளை கிணறுகளின் கைபம்புகள் மற்றும் சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளையும் சரிசெய்து இயக்கத்தில் தொடர்ந்து இருக்குமாறு பேணப்பட வேண்டியுள்ளது. தற்போது இந்நகராட்சியில் குடிநீர் கசிவு பணிகளையும், ஆழ்துளை கிணறு பணிகளையும் உடன் அவ்வப்போது மேற்கொள்ள போதிய குடிநீர் பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், அதற்குண்டான உதிரிபாகங்கள் இல்லாத காரணத்தாலும் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு செவ்வனே பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே குடிநீர் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சி வார்டு எண்.**17** முதல் **33** வரை உள்ள பகுதிகளில் ஏற்படும் மேற்படி குடிநீர் சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.**6.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண். 127/2019/இ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |
| **4** | 796 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட ஆணையர் சுப்பையா வீதியில் உள்ள நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தின் பின்புறத்தில் உள்ள சுற்றுச் சுவரானது மிகவும் மோசமாக இடியும் நிலையில் உள்ளதால் சேதமடைந்துள்ள சுற்றுச்சுவரினை அகற்றிவிட்டு புதியதாக சுற்றுச்சுவர் அமைக்கவும் நகராட்சி அலுவலகத்தின் இருபுறங்களிலும் மழைநீர் வடிகால் அமைப்பதற்கும் ரூ.11.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 138/2019/இ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |
| **5** | 797 | இந்நகராட்சிக்குட்பட்ட தியாகி N.G.ராமசாமி வீதியிலுள்ள ஆணையாளர் குடியிருப்பிலுள்ள சுற்றுச்சுவரானது மிகவும் சிதிலமடைந்து மோசமான நிலையில் இடியும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட ஆணையாளர் குடியிருப்பில் கூடுதல் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளவதற்கு ரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 137/2019/இ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |
| **6** | 798 | இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பூங்காவின் நுழைவாயிலில் (பழைய காவல் நிலையம்) வாகனங்கள் மோதி சிதலடைந்து மோசமான நிலையில் உள்ளதால் பொது சுகாதார பிரிவு வாகனங்கள் நிறுத்த இயலாத நிலை உள்ளது. மேற்கண்ட குறைபாடுகளை சரி செய்ய ரூ.0.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. V.சிதம்பரம் அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தில் அனுமதி கோரப்படுகின்றது.<br>அலுவலகக் குறிப்பு : மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 130/2019/இ1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |

<table>
<tr><td>7</td><td>799</td><td>உடுமலைபேட்டை நகராட்சிக்கு உட்பட்ட கீழ்கண்டுள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் நலன்கருதி ஆணையர் / நகராட்சிப் பொறியாளரின் அறிவுரையின் பேரில் மேற்படி பகுதிகளில் தெருவிளக்குகள் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி பெற்று, ஏற்கனசவே உள்ள மின்கம்பங்களில் மின் கடத்தி பொருத்துவதற்கு மின் வாரியம் கோரும் மதிப்பீட்டு தொகையினை செலுத்தி மின்கடத்தி பொருத்தி 15W LED விளக்குகள் அமைப்பதற்கும், அதற்குண்டான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table>
<tr><td>1</td><td>வார்டு எண் : 6, சிவசெல்லம்மாள் லேஅவுட் 15W LED</td><td>2 No's</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண் : 33 சின்னச்சாமி லேஅவுட் 15W LED</td><td>2 No's</td></tr>
<tr><td>3</td><td>வார்டு எண் : 31 இராமசாமி நகரில் உள்ள அண்ணபூரணி நகர் 15W LED</td><td>2 No's</td></tr>
</table>அலுவலக குறிப்பு :<br>1) மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மின் வாரியம் கோரும் மதிப்பீட்டு தொகையினை செலுத்தவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 157/2019/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
<tr><td>8</td><td>800</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில், பையோ மைனிங் முறையில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணி நடைபெற்று வருவதால் மேற்படி இடத்தில் "கேமராக்கள்"அமைக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கியதன் பேரில் மேற்கண்ட இடத்தில் கிழக்கு பகுதியில் 3 எண்ணிக்கை புதியதாக "கேமராக்கள்" கேபிள் மற்றும் அதன் மின் உதிரி பாகங்களுடன் விநியோகம் செய்து பொருத்தும் பணிக்கு நகராட்சி ஒப்பந்ததாரர் திருவாளர் R.S.M &Co Udumalpet என்ற நிறுவனம் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.40,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 172/2019/இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
<tr><td>9</td><td>801</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில், பையோ மைனிங் முறையில் குப்பைகளை சுத்தம் செய்யும் பணி நடைபெற்று வருவதால் மேற்படி இடத்தில் "கேமராக்கள்"அமைக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கியதன் பேரில் மேற்கண்ட இடத்தில் மேற்கு பகுதியில் 3 எண்ணிக்கை புதியதாக "கேமராக்கள்" கேபிள் மற்றும் அதன் மின் உதிரி பாகங்களுடன் விநியோகம் செய்து பொருத்தும் பணிக்கு நகராட்சி ஒப்பந்ததாரர் திருவாளர் R.S.M &Co Udumalpet என்ற நிறுவனம் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.40,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 173/2019/இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
<tr><td>10</td><td>802</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை மின் ஆற்றல் (ESCO) சேமிப்பு விளக்குகளாக மாற்றி அமைக்கும் பொருட்டு தனியார் நிறுவனமான மெசர்ஸ்.ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிறுவனம் மூலம் 25.03.2015 முதல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனம் மூலம் கீழ்க்கண்ட விபரப்படியான தெருவிளக்குகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 1. | 15W/20W LED | : | 2807 |
| 2. | 70W SVL/MHL | : | 42 |
| 3. | 130W SVL/150W SVL | : | 74 |
| 4. | 220W SVL/250W SVL | : | 193 |
| 5. | 400W MHL | : | 124 |
| 6 | 1*36W CFL | : | 114 |
| 7. | 2*36W CFL | : | 1 |
| | Total | : | 3355 எண்ணிக்கை |

மேலும், தற்போது உடுமலைப்பேட்டை நகராட்சியில் பயன்பாட்டில் இருந்து வரும் மேற்படி நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்க்கண்ட விபரப்படியான உயர் மின் கோபுர விளக்குகள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மத்திய பேருந்து நிலையம் உயர் கோபுர மின் விளக்கு Sc No.301-008-1145 | : | 14*2 = 28 Lights (400W MHL) |
| 2. | பழைய பஸ் நிலையம் உயர் கோபுர மின் விளக்கு Sc No.301-008-1728 | : | 6*2 = 12 Lights (400W MHL) |
| 3. | தளி ரோடு நூலகம் அருகில் உயர் கோபுர மின் விளக்கு Sc No.302-010-882 | : | 6*2 = 12 Lights (400W MHL) |
| 4. | கல்பனா ரோடு சித்திரகூடம் அருகில் உயர் கோபுர மின் விளக்கு Sc No.301-014-1471 | : | 6*2 = 12 Lights (400W MHL) |
| 5. | ருத்திரப்பா நகர் உயர் கோபுர மின் விளக்குSc No.302-003-1721 | : | 6*2 = 12 Lights (400W MHL) |
| 6. | உழவர் சந்தை (ரயில்வே கேட் எதிரில்) உயர் கோபுர மின் விளக்கு Sc No.302-006-919 | : | 6*2 = 12 Lights (400W MHL) |
| 7. | மத்திய பேருந்து நிலையம் (மேற்கு பகுதி) உயர் கோபுர மின் விளக்கு Sc No.301-008-2223 | : | 6*2 = 12 Lights (400W MHL) |
| 8. | அண்ணாகுடியிருப்பு உயர் கோபுர மின் விளக்கு Sc No.302-012-378 | : | 6*2 = 12 Lights (400W MHL) |
| 9. | கொல்லம்பட்டறை அருகில் உயர் கோபுர மின் விளக்கு Sc No.301-009-2483 | : | 6*2 = 12 Lights (400W MHL) |

மேற்கண்ட உயர் கோபுர மின் விளக்குகள் மட்டும் மேற்படி நிறுவனமான மெசர்ஸ்.ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் முடிவடைந்த நிலையில் உள்ள கீழ்க்கண்ட விபரப்படியான உயர் கோபுர மின் விளக்குகள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்பனா திடல் காளியம்மன் கோவில் அருகில் உள்ள உயர் கோபுர மின் விளக்கு Sc No.301-014-1671 | : | 6*2 = 12 Lights (400W MHL) |
| 2. | ஏரிப்பாளையம் உயர் கோபுர மின் விளக்கு Sc No.301-006-1958 | : | 6*2 = 12 Lights 1*4 = 4 Lights (400W MHL) |

| | | | |
|---|---|---|---|
| 3. | ரயில்வே ஸ்டேசன் அருகில் உள்ள உயர் கோபுர மின் விளக்கு Sc No.302-006-899 | : | 6*2 = 12 Lights<br>1*4 = 4 Lights<br>(400W MHL) |
| 4. | கொழுமம் ரோடு உயர் கோபுர மின் விளக்கு Sc No.302-013-1345 | : | 6*2 = 12 Lights<br>1*4 = 4 Lights<br>(400W MHL) |
| 5. | வெஞ்சமடை உயர் கோபுர மின் விளக்கு Sc No.305-010-633 | : | 6*2 = 12 Lights<br>(400W MHL) |
| 6. | ஸ்டேட் பேங்க் காலனி உயர் கோபுர மின் விளக்கு Sc No.301-005-894 | : | 6*2 = 12 Lights<br>(400W MHL) |

ஆகிய 6 எண்ணிக்கையும் மற்றும் நகராட்சி அலுவலகம் அருகில் அமைக்கப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலத்தின் மேற்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 24 எண்ணிக்கை 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் நெடுஞ்சாலை துறையின் மூலம் அமைக்கப்பட்டு நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்டுள்ள 6 எண்ணிக்கை உயர் கோபுர மின் விளக்குகள் (84 விளக்குகள்) மற்றும் 24 எண்ணிக்கை 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் ஆகியவற்றை மேற்படி விளக்குகளை ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமான மெசர்ஸ்.ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் என்ற நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள கீழ்க்கண்ட விபரப்படியான செலவினம் ஆகும்

1. உயர் கோபுர மின் விளக்குகள் : 84 எண்ணிக்கை
2. மேம்பாலம் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் : 24 எண்ணிக்கை

| **ஆண்டு பராமரிப்பு செலவினம்** | | **பராமரிப்பு நிறுவனத்தின் ஒப்பந்த அடிப்படையில்** |
|---|---|---|
| 1. உயர் கோபுர மின் விளக்குகள் 400 வாட்ஸ் மெட்டல் ஹலாய்டு விளக்குகள் (ஒரு விளக்கின் ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.1900/- | : | 84*1900= 159600/- |
| 2. மேம்பாலம் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் (ஒரு விளக்கின் ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.1100/- | : | 24*1100= 26400/- |

மேற்படி தெருவிளக்குகளை, மேற்படி நிறுவனம் மூலம் பராமரிப்பு மேற்கொள்ளவும், அதற்காகும் ஆண்டு செலவினம் ரூ.1.86 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்3506/2012/இ2

<table>
<tr><td>11</td><td>803</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட திருமூர்த்தி நகர் தலைமை குடிநீர்த்திட்ட சுத்திகரிப்பு நிலைய மெதுமணல் தொட்டிகள், சுத்த நீர்தேக்கத்தொட்டிகள் மற்றும் பணியிட வளாகங்களை தனியார் மூலம் தற்காலிக தினக்கூலிப்பணியாளர்களை நியமித்து வருடாந்திர ஒப்பந்தப்பணி அடிப்படையில் பராமரித்தல் பணி ரூ.8.34 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.767 நாள்–31.12.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு. 18.01.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,
<table>
<tr><td>1.</td><td>M/s.RSM & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.29% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Raj & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 1.17% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.RSM & Co, Udumalpet அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண் 3317/2018/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>12</td><td>804</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட திருமூர்த்தி நகர் தலைமை குடிநீர்த்திட்ட நீருந்து நிலையத்தில் உள்ள முதலாம் மற்றும் இரண்டாம் குடிநீர்த்திட்ட மின் உந்துகள் மின் ஆக்கிகள் மற்றும் மின் சாதனங்களை தனியார் ஒப்பந்தம் மூலம் தற்காலிக தினக்கூலி தொழில்நுட்ப மின்கம்பியாளர்களை கொண்டு வருடாந்திர ஒப்பந்தப்பணி அடிப்படையில் பராமரித்தல் பணி ரூ.5.71 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.766 நாள்– 31.12.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு. 18.01.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,
<table>
<tr><td>1.</td><td>M/s.RSM & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.21% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Raj & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.64% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.RSM & Co, Udumalpet அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண் 3316/2018/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>13</td><td>805</td><td>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் இணைப்பு பணிகள் தொடர்பாக அலுவலக பணி மேற்கொள்ள தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் 1 எழுத்தர் அமர்த்தும் பணி ரூ.1.63 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.769 நாள்– 31.12.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு. 18.01.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,
<table>
<tr><td>1.</td><td>M/s.RSM & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.25% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Raj & Co, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 1.25% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.RSM & Co, Udumalpet அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண்3315/2018/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>14</td><td>806</td><td>சமூகநல ஆணையர், சென்னை அறிவுரைகளின்படி இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட நகராட்சி சத்துணவு மையங்களில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு பணி மேற்கொள்ளவும் மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினம் கலிவிநிதி மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><th>வ.<br>எ<br>ண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத்தொகை<br>(ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>சதாசிவம் வீதி நகராட்சி பள்ளி சத்துணவுக்கூடம் மராமத்துப்பணி</td><td>1.25</td></tr>
<tr><td>2</td><td>நெல்லுக்கடை வீதி, டி.வி பட்டிணம் நகராட்சி பள்ளி சத்துணவுக்கூடம் மராமத்துப்பணி</td><td>1.65</td></tr>
<tr><td>3</td><td>ராமசாமி நகர், பி.ஏ நகர் நகராட்சி பள்ளி சத்துணவுக்கூடம் மராமத்துப்பணி</td><td>1.50</td></tr>
<tr><td>4</td><td>கணக்கம்பாளையம், ருத்ரப்பா நகர் நகராட்சி பள்ளி சத்துணவுக்கூடம் மராமத்துப்பணி</td><td>1.35</td></tr>
<tr><td>5</td><td>யு.கே.சி நகர், தாராபுரம் சாலை நகராட்சி பள்ளி சத்துணவுக்கூடம் மராமத்துப்பணி</td><td>1.30</td></tr>
<tr><td>6</td><td>ஏரிப்பாளையம், கச்சேரி வீதி நகராட்சி பள்ளி சத்துணவுக்கூடம் மராமத்துப்பணி</td><td>1.30</td></tr>
<tr><td>7</td><td>எக்ஸ்டன்சன், சிங்கப்பூர் நகர் நகராட்சி பள்ளி சத்துணவுக்கூடம் மராமத்துப்பணி</td><td>1.55.</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு —— மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்2353/2018/இ1
</td><td></td></tr>
<tr><td>15</td><td>807</td><td>
இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் நகர்நல அலுவலர் பயன்பாட்டுக்கு உள்ள வாகன ஈப்பு எண் TN 41 V 9606 ல் உள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.85000/—ற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு 23.1.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>மெசர்ஸ் ஜோஸ் தேவசி அன் கோ., பொள்ளாச்சி</td><td>ரூ.85000/—</td></tr>
<tr><td>2.</td><td>மெசர்ஸ் பி.பி ஷெரீப் ஆட்டோ டீசல் வொர்க்ஸ், உடுமலைப்பேட்டை</td><td>ரூ.88950/—</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெசர்ஸ் ஜோஸ் தேவசி அன் கோ., பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:—</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண் 60/2019/எச்1
</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>16</td><td>808</td><td>
வட்டாட்சியர் உடுமலைப்பேட்டை அவர்களின் 17.12.2018ம் தேதிய ந.க. எண். 5801/2018/அ4, எண்ணிட்ட கடிதத்தில் உடுமலைப்பேட்டை நகராட்சி வார்டு இ, பிளாக் எண். 25, நகரளவு எண். 1 மற்றும் 2D வண்டிப்பாதை புறம்போக்கை நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து 25 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க தீர்மான நகல் கோரப்பட்டுள்ளது.<br>
மேற்படி இடத்தில் சுமார் 30 வருடங்களாக வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டி மனு செய்துள்ளதாகவும் வருவாய் வட்டாட்சியர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.<br>
மேற்படி நபர்கள் குடியிருந்து வரும் இடமானது நகரளவு ஆவணங்களில் வண்டிப்பாதை புறம்போக்கு என வகைப்பாடு உள்ளதால் நத்தமாக மாற்றி இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டதன்படி மேற்கண்ட வண்டிப்பாதை புறம்போக்கை நத்தமாக வகைப்பாடு செய்து பட்டா வழங்க ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு :— அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண் 3377/2018/எப்1
</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **17** | 809 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி, காலியிட வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை இன வசூல் மற்றும் பாதாளச்சாக்கடைக்கான வைப்புத்தொகை மற்றும் தொழில் உரிமக்கட்டணங்கள் ஆகிய இனங்களின் வசூலினை துரிதப்படுத்தும் வகையிலும், மேலும் 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்யப்பட்டுள்ள விபரத்தை பொதுமக்களுக்கு தெரிவித்து நிலுவையிலுள்ள சொத்துவரித்தொகையினை செலுத்த தெரிவித்து 2018 - 2019ம் ஆண்டிற்கு ஆட்டோ விளம்பரம் செய்து மேற்கண்ட வரி வசூலினை வசூலிக்க ஆட்டோ மூலம் ஒலி பெருக்கி வைத்து விளம்பரம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்,<br>, (கோப்பு எண்: 3369/2017/அ1) | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **18** | 810 | நடைபாதை வியாபாரிகள்(வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் **2014**, பிரிவு **3**- ன் கீழ், அந்தந்த உள்ளாட்சியே துணை விதிகள் தயார் செய்யப்பட வேண்டும் என உள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையரின் ந.க.எண்.**7366/2016**/UPA-2/நாள்:**03.09.2018**–ஆம் தேதிய கடிதத்தில், துணை விதிகள் தயார் செய்திடவும், அதனை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அதன்படி தயார் செய்யப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கான துணை விதிகள் **2018**–யை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தினசரி நாளிதழில் வெளியிடவும் அதனைத் தொடர்ந்து மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவேண்டிய துணை விதிகள் **2018**– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**UDUMALPET MUNICIPALITY**<br>Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Bye-laws, 2018<br>**NOTIFICATION**<br>Roc.No.4692/2016/F1<br><br>In exercise of the Powers conferred by Section 37 of the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Act, 2014 (Central act 7 of 2014), and subject to the other Provisions of the Act, the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood, Regulation of Street Vending and Licensing) Scheme, 2015 and the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Rules, 2015 made there under, the UDUMALPET Municipality, hereby makes the following bye–laws for the Street Vending.<br><br>In accordance with chapter XIV section 306 of the Tamil Nadu District Municipalities Act, 1920 and their subsequent revisions in the sub-sections thereof and in order to ensure effective regulation of Street Vending in the UDUMALPET Municipality, the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Bye-Laws, 2018 are framed. | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

## CHAPTER I

## PRELIMINARY

1. **Short title and Commencement-** (1) These Bye – Laws may be called the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Bye-laws, 2018 for Udumalpet Municipality.

   (2) It shall come into force on the date of its publication

2. **Definitions** - In these bye-Laws, unless the context otherwise requires,-

(i) "*Act*" means the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending ) Act, 2014 (Central Act 7 of 2014);

(ii) "*Plan*" means a plan prepared under section 21 of the Act;

(iii) "R*ules*" means The Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Rules, 2015;

(iv) "*Scheme*" means the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood, Regulation of Street Vending and Licensing) Scheme, 2015 framed under section 38 of the Act;

(v) "*town vending Committee*" means a town vending Committee constituted under the rules;

Words and expressions defined in the Act, Rules or Scheme and used in these Bye-Laws shall have the same meaning as respectively assigned to them in the Act, Rules and Scheme.

## CHAPTER –II

### 3.REGULATION AND MANNER OF VENDING IN VENDING ZONES

(1) The town vending committee shall decide vending zones considering the intensity of foot falls, road width and the vehicular and pedestrian movement in the roads in the area.

(2) The carrying capacity of an area would put the limit on the number of street vendors which can be positioned in any area. It shall be the duty of the designated official of the Udumalpet Municipality to keep a check that the number of mobile vendors at a specific place shall not cross the limit fixed by the town vending committee.

(3) The restricted vending zones are mainly linked up with the road width, and the roads of the following description have been put in this category in the plan;

(i) No stationery vending is proposed on the roads having very small width equal to 6 meters having two way traffic. However, street vending can be allowed if any such roads are declared as no vehicular road, at any point of time.

(ii) No street vending for the roads having small width between 3 meters to 5 meters. However, street vending can be allowed if such road is declared one way vehicular road.

| | | | |
|---|---|---|---|
| | | (iii) One side street vending on the roads having reasonably big width between 5 meters to 6 meters.<br><br>(iv) Both side street vending for the roads having big width 10 meters and above.<br><br>(v) The number of street vendors shall be decided after taking into consideration the holding capacity of each designated vending area on such a road,<br><br>(vi) Such stationary vending shall be allowed after taking the clearance from traffic police regarding the smooth vehicular and pedestrian movement. If necessary, road side parking shall be banned in areas where street vending is allowed.<br><br>(vii) Mobile vending shall be allowed on such roads considering sufficient space for traffic and pedestrian movement, and<br><br>(viii) Suggestive road designing as provided in the Annexure appended to these bye-laws.<br><br>(4) No vending zones,-<br><br>(i) 10 meters from the entry and exit points of the Government buildings, High Court, Other Courts, District Collectorate, Offices of District Panchayat, Municipal Corporation / Municipality, Fire Brigade stations etc.<br><br>(ii) 50 meters from the entry and exit points of railway stations.<br><br>(iii) 30 meters on both the sides of railway crossing falling within the city limits.<br><br>(iv) 50 meters from the entry and exit points of bus terminus.<br><br>(v) No vending in the areas as enjoined in the relevant provision of Ancient Monuments and Archaeological Sites and Remains Act, 2010 and the State Archaeological Monument Protection Act.<br><br>(vi) The areas prohibited under the provisions of the Built Heritage Conservation Rules.<br><br>30 meters from any crossing of two or more roads on all sides.<br><br>(vii) 30 meters on both the side from the entry and the exit of any educational institution.<br><br>(viii) Any Area which the state has prohibited from being used as vending space from the angle of security. | |

(ix) Any other area which the local Body in consultation with the Town Vending Committee considers fit to be included in the category of no vending zone,

Note: No existing market or a natural market as identified under the survey is to be included as a no–vending zone.

**4.Restriction on street vendors**,- A street vendor who has been granted the certificate of vending for any vending zones shall not-

(i) obstruct or interfere with vehicle, bi-cycle or pedestrian traffic or their safety,
(ii) obstruct or interfere with doorways, entrances, fire doors or emergency exits abutting the street.
(iii) obstruct or interfere with any utilities like water supply, sewerage, telephone, electricity, or similar installations.
(iv) obstruct or interfere with any other structures, sign boards, display units, city works or operations, on or adjacent to the street.

(v) sell any objectionable goods or services or merchandise etc.
(vi) occupy more space than allotted by the town vending committee
(vii) sell goods or service or merchandises after fixed hours as specified by the town vending committee.

(viii) throw garbage anywhere except at specific places identified by the local authority.

(ix) sell the goods or service or merchandises after expiry of the certificate of vending, and

(x) make use of loudspeakers, megaphones, sound systems or other amplification equipment and reflective signage.

**5.Responsibility of Street vendors**,- It shall be the duty of the street vendors or his family members or employee to,-

(i) Comply with all the conditions specified in the certificate of vending;

(ii) vend in the place specified in the certificate of vending;

(iii) display the certificate of vending at the vending place all the time;

(iv) ensure that either the street vendors or his family member whose name has been mentioned in the certificate of vending nor his employee remains present at the vending place during the vending hours;

(v) keep the vending place safe and in good conditions at all the times;

(vi) comply with any safety and sanitary requirement of the local authority;

(vii) comply with all the requirements of the Prevention of Food Adulteration Act, 1954 or any other laws, as applicable :

(viii) comply with the Municipal Solid Waste Management Rules, 2016;

(ix) comply with the Plastic Waste Management Rules, 2016;

(x) produce the certificate of vending when demanded by the competent authority, and

(xi) Follow all the requirement of these bye-Laws

## CHAPTER – III
## FEES, CHARGES, TAXES AND PENALTIES

**6.Vending Fees:-** (1) Vending Fees to be paid to the local authority by the Street vendors.

(2) The vending fees under clause (1) shall be as mentioned in the table below:-

| Sl No | Category of Street Vendors | Area | Vending Fee |
|---|---|---|---|
| 1. | Stationary Vendor (Full time) | Upto 10 sq.ft. | 1% of the Guideline value subject to minimum of Rs.1200/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | 2% of the Guideline value subject to minimum of Rs.2500/- per annum |
| | | More than 25 sq.ft. | 3% of the Guideline value subject to minimum of Rs.5000/- per annum |
| 2. | Stationary Vendor (Part time or time sharing ) | Upto 10 sq.ft. | 0.5% of the Guideline value subject to minimum of Rs.600/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | 1.0% of the Guideline value subject to minimum of Rs.1200/- per annum |
| | | More than 25 sq.ft. | 1.5% of the Guideline value subject to minimum of Rs.2500/- per annum |
| 3. | Mobile Vendor (with motor vehicle) | Upto 10 sq.ft. | Rs.1200/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | Rs.2500/- per annum |
| | | More than 25 sq.ft. | Rs.5000/- per annum |

| | | | |
|---|---|---|---|
| 4. | Mobile Vendor (without motor vehicle) | Upto 10 sq.ft. | Rs.600/- per annum |
| | | From 10 to 25 sq.ft. | Rs.1200/- per annum |
| | | More than 25 sq.ft. | Rs.2500/- per annum |
| 5. | Mobile Vendor (Headloads) | - | Rs.500/- per annum |

(3) Once in three years the Vending Fees shall be revised and published in the notice board of the local body.

**7. Maintenance Charges:-** (I) The monthly maintenance charges to be paid to the local authority for the civic amenities and facilities in the vending zones shall be according to the category to the street vendors and the status of the market. The categories of the vendors and markets shall be decided by the town vending committee.

(2) The charges under clause (1) shall not be less than Rs. 100/- and more than Rs.1000/- per month .

**8. Penalty to be levied:-** (1) If any street vendor-

(i) who fails to relocate to the place specified in the certificate of vending or vacate the existing restricted or prohibited zone

(ii) indulges in vending activities without the certificate of vending or contravenes the term of certificate of vending or contravenes any other terms and conditions specified for the purpose of regulating street vending under the Act, rules or scheme made there under,shall be liable to pay a penalty (three) times of the amount of the monthly maintenance charge.

(2) if the street vendor breaches the conditions laid down in the Certificate of Vending three times, his certificate of vending shall be suspended and if the street vendors breaches the condition the 4th time, his certificate shall be cancelled.

## CHAPTER – IV
## MISCELLANEOUS

**9. Regulation of traffic in vending zones:**- (1) Wherever a vending zone is declared by the town vending committee, the traffic police shall decide about one way traffic, speed limit, parking, movement of heavy vehicles and such other incidental matters. In a case where the traffic police does not agree with the declaration of the vending zone in a particular area, the town vending committee shall reconsider in respect of vending zones and decide either to shift or to cancel the zone for such areas.

(2) The local authority shall clearly earmark the vending area, footpath and carriage way in the vending zones.

**10. Regulation of quality of products and services provided to public in vending zones:-** Any vendor, who sells food articles, readymade or processed, on the site, he shall follow all the provisions of the Prevention of Food Adulteration Act, 1954. In case of failure,

penal measures shall be initiated by the concerned authority as provided in that Act and on conviction by the competent court, his certificate of vending shall be cancelled by the town vending committee with immediate effect.

**11. Regulation of civic services in vending zones:-** (1) The public toilet and drinking water facilities be provided in the vending zones by the local authority.

(2) The proper collection of solid waste management system shall be provided by the local authority.

(3) The lighting to vendors shall be allowed by rechargeable lamps or self energizing mechanism.

4) No individual electricity and water connection be allowed in the vending zones.

5) Illegal tapping of electricity from the electricity post is prohibited.

## உடுமலைப்பேட்டை நகராட்சி

**சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018**

**அறிவிக்கை**

ந.க.எண். 4692/2016/எப்1

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் உடுமலைப்பேட்டை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், உடுமலைப்பேட்டை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

**அத்தியாயம்–1**

**முதனிலை**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** இந்த துணை விதிகள் உடுமலைப்பேட்டை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

**பொருள் வரையறைகள்.–** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

**(i)** "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

**(ii)** "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;

**(iii)** "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;

**(iV)** "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;

**(V)** "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

**3.(1)** பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து உடுமலை நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதி–++க்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களிள்,

(i) அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு

(Viii) ‘எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும்

வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு–** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3

## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்குரூ.1200/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்குரூ.2500/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு ரூ.5000/–க்கு குறையாமல் |

| | | | |
|---|---|---|---|
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் – வருடத்திற்குரூ.600/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்குரூ.1200/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.2500/–க்கு குறையாமல் |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ1200/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.2500/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.5000/– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.600/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1200/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ2500/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.500/– |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

**7. பராமரிப்பு கட்டணம்,–**

(1) சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு ரூ.100 /–க்கு குறையாமலும், ரூ.1000 /–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

**8. அபராதம் விதித்தல்,–** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | | **அத்தியாயம்– 4**<br>**பலவகை**<br>**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.– (1)** நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.<br>(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.<br>**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.<br><br>**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,–**<br>(1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.<br><br>(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.<br>(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.<br>(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.<br>(5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>i)மன்றம் அனுமதிக்கலாம்<br>ii)மேற்கண்ட செலவீனங்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க (NULM) நிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br>(ந.க.எண் 4692 / 2016 / எப்1) | |
| **19** | 811 | **2018–19**ம் ஆண்டிற்கான நகராட்சி நிறுவனம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண். **34** குறித்தான விவாதத்தின்போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைக்க மாநகராட்சி மற்றும் **124** நகராட்சிகளுக்கு உள்ள பூங்காக்களை அனைத்து அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.<br><br>இது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் **7.8.2018** அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்திற்கு நகராட்சிப் பகுதிகளில் உள்ள பூங்காக்களை மூன்று கோணங்களில் புகைப்படம் எடுத்துக்கொண்டு வரத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி பூங்காக்களை மூன்று கோணங்களில் புகைப்படம் எடுத்த வகைக்கான செலவு தொவை ரூ. **20960/–**க்கு அனுமதி வழங்கவும் அவசர அவசியத்தை முன்னிட்டு ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளியாக ஏற்கப்பட்ட | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | அவதார் டிரேடர்ஸ் உடுமலை நிறுவனம் மூலம் புகைப்படம் எடுத்ததற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :– அனுமதிக்கலாம்**<br>**(ந.க.எண். 4782/2017/எப்1)** | |
| **20** | 812 | இந்நகராட்சியில் கணினி இயக்கும் பணிக்கு பணியாளர் பற்றாக்குறை உள்ளதாலும் தேர்தல்கள் தொடர்பான பணிகளுக்கும், தட்டச்சுப்பணிகள் கணினி மூலம் மேற்கொள்வதாலும் தற்காலிகமாக கணினி இயக்கும் பணிக்கு நபர் ஒருவரை ஒப்பந்ததாரர் மூலம் மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்களின் (செந்தாரவீதப்பட்டியல்) செயல்முறை ஆணை ந.க.எண் 6816/2018/உ3 நாள் 18.09.2018ன் படி பணியமர்த்திக்கொள்ள 2019–2020ம் நிதி ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1,70,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**கோப்பு எண் 3746/ 2015 /அ4** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **21** | 813 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் 2019–2020ம் நிதியாண்டிற்கு ஆணையாளரின் அலுவலகம் மற்றும் பொறியாளர் அலுவலகங்களுக்கு தினசரி நாளிதழ்கள் வாங்கி வழங்கிட ஆகும். உத்தேச செலவினம் ரூ.35000/- க்கு (முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –** மன்ற அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 244 / 2019/சி2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **22** | 814 | உடுமலைப்பேட்டை நகராட்சி அம்மா உணவகத்தில் 2019–2020ம் நிதி ஆண்டிற்குத் தேவையான இட்லி டோக்கன்கள் , சாம்பார் சாத டோக்கன்கள் மற்றும் தயிர்சாத டோக்கன்கள், பதிவேடுகள் அரசு சார்ந்த கூட்டுறவு அச்சங்களிடம் இருந்து கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–ஐ இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –** மன்ற அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 246 / 2019 /சி2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **23** | 815 | உடுமலைப்பேட்டை நகராட்சி புதிவறைக்கு 2018–2019ம் நிதி ஆண்டிற்குத் தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள், டோனர்கள் ஆகியவற்றை அரசு கூட்டுறவு சார்ந்த அச்சகங்களிடம் இருந்து வாங்கி வழங்கிட ஆகும் உத்தேத செலவினத்தொகை ரூ.5,00,000/–க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –** மன்ற அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 773 / 2019 /சி2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **24** | 816 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் சட்டமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் தொடர்பான ஆட்டோ விளம்பரம் மேற்கொள்ளுதல் மற்றும் அலுவலகம் தொடர்பான ஜெராக்ஸ் எடுக்க 2019-2020 நிதி ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/- (ஐம்பதாயிரம் மட்டும்) இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –** மன்ற அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 245 / 2019 /சி2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **25** | 817 | இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடப்பொருட்கள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.400000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 89 /2017/எச்1)** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **26** | 818 | உடுமலைப்பேட்டை நகராட்சி, பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் ரயில் நிலையத்தில் 02.02.2019 அன்று அமிர்தா எக்ஸ்பிரஸ் ரயில் நின்று செல்லும் விழா நடைபெறுவதால் ரயில் நிலைய சுற்றுப் பகுதியிலும் மற்றும் நுழைவு வாயிலுக்கு பின்புறப்பகுதியிலும் சீமை கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்கள் அப்புறப்படுத்திட வேண்டுமென கூறியதற்கிணங்க, இப்பகுதியில் பொதுசுகாதாரம் பாதிப்பு ஏற்படா வண்ணம் JCB and TIPPER ஆகியவற்றின் மூலம் அப்புறப்படுத்த ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.40,000/-க்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஆர்.எஸ்.எம் அன்டு கோ, உடுமலைப்பேட்டை அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளுவதற்கும், தனி அலுவலர், உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**(ந.க.எண் : 220 / 2019 / இ2)** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **27** | 819 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பழனியாண்டவர் நகர் செல்லும் வழியில் கூட்செட் ரோட்டில் ரயில் நிலையத்தின் மேற்கு பகுதியில் முட்புதர்கள் நிறைந்து புதர்மண்டி இருப்பதால் பொதுசுகாதாரம் பாதிப்பு ஏற்படா வண்ணம் இப்பகுதியில் JCB இயந்திரம் மூலம் அகற்றப்பட வேண்டுமென சுகாதார ஆய்வாளர் அவர்களிடமிருந்து கருத்துரு வரப்பெற்றதற்கிணங்க மேற்கண்ட பகுதியில் பொது சுகாதார அவசியம் கருதி முட்புதர்களை அகற்றிட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.40,000/-க்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஆர்.எஸ்.எம் அன்டு கோ, உடுமலைப்பேட்டை அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளுவதற்கும், தனி அலுவலர், உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண் : 219 / 2019 / இ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **28** | 820 | உடுமலைப்பேட்டை நகராட்சி வார்டு எண்.4, அனுஷம் நகர் முதல் வீதி மற்றும் வார்டு எண்.14, எக்ஸ்பிரஸ் அவென்யூ ஆகிய பகுதிகளில் பகிர்மானக்குழாய்கள் இல்லாத காரணத்தால் சுமார் 10 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு இணைப்பு வழங்காத நிலையில் உள்ளது. எனவே புதியதாக பகிர்மானக்குழாய்கள் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ளவும், கோடைக்காலம் துவங்க உள்ளதாலும், மேற்கண்ட பணி குடிநீர் பணியாக இருப்பதால் அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஆர்.எஸ்.எம் அன்டு கோ, உடுமலைப்பேட்டை அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளுவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.234/2019/இ2)** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **29** | 821 | உடுமலைப்பேட்டை நகராட்சி வார்டு எண்.4, அனுஷம் நகர் 100 அடி ரோடு மற்றும் வார்டு எண்.31, ஜிடிவி லே அவுட் ஆகிய பகுதிகளில் பகிர்மானக்குழாய்கள் இல்லாத காரணத்தால் சுமார் 15 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு இணைப்பு வழங்காத நிலையில் உள்ளது. எனவே புதியதாக பகிர்மானக்குழாய்கள் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ளவும், கோடைக்காலம் துவங்க உள்ளதாலும், மேற்கண்ட பணி குடிநீர் பணியாக இருப்பதால் அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஆர்.எஸ்.எம் அன்டு கோ, உடுமலைப்பேட்டை அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளுவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 235 /2019/இ2)** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **30** | 822 | நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க உடுமலைப்பேட்டை நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் வருகை பதிவேடு பதிவு செய்யும் இயந்திரம் (Bio-Metric) நகராட்சி அலுவலகம், துப்புரவு பணியாளர்கள் வருகைப்பதிவேடு பதிவு செய்யும் 5 டிவிசன்கள், திருமூர்த்திநகர் தலைமைக்குடிநீர் பணியிடம் மற்றும் கங்காதரன் லே அவுட் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆகிய 8 இடங்களில் விநியோகம் செய்து பொருத்தும் பணி மேற்கொள்ள ரூ.2.25 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர், உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**- மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 237 /2019/இ1)** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **31** | 823 | உடுமலைப்பேட்டை நகராட்சி புதிவறைக்கு 2019–2020ம் நிதி ஆண்டிற்குத் தேவையான படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள், டோனர்கள் ஆகியவற்றை அரசு கூட்டுறவு சார்ந்த அச்சகங்களிடம் இருந்து வாங்கி வழங்கிட ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.25,00,000/–க்கு (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம் மட்டும்) இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு —— மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 247/2019/சி2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **32** | 824 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொறியாளர் பிரிவில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், பெறுவதற்கும் E-Tender முறையில் பயன்படுத்தப்படும் DSC (Digital Signature Card) பொறியாளருக்கானது 03.01.2019-ல் உரிமைக்காலம் முடிவடைந்து விட்டது. எனவே மேற்கண்ட Card-யை புதுப்பிக்க வேண்டியுள்ளதால் அதற்கான கட்டணம் ரூ.5000/-ம் M/s.Safe Solutions, Coimbatore நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.<br>அலுவலகக்குறிப்பு —— மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 190/2019/இ1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **33** | 825 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட ஆர்.ஆர்.லட்சுமியம்மாள் லே அவுட்டில் உள்ள பூங்காவில் கேட் மற்றும் வேலி இல்லாததால் பொதுமக்களுக்கு பூங்காவினை பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட பூங்காவில் புதியதாக கேட் மற்றும் வேலி போன்ற அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள ரூ.0.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு —— மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 207/2019/இ1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

<table>
<tr><td>34</td><td>826</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை Front End Loader and Tipper Lorry மூலம் அகற்றும் பணி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.754 நாள்:14.12.2018-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 28.01.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,
<table>
<tr><td>1.</td><td>Thiru.T.Selvakumar, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.12% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Sri Selliamman & Co, Coimbatore</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.41% அதிகம்</td></tr>
</table>
எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்துள்ள Thiru.T.Selvakumar, Udumalpet (மதிப்பீட்டை விட 0.12% குறைவு) ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:—</u> மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண் 3344/2018/இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>35</td><td>827</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் தொழில்வரி கேட்பு நிலுவைப் பட்டியலில் அரசு (ம) அரசு துறை சார்ந்த அலுவலகங்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பணிபுரியும் அலுவலர்கள் (தனி நபர்கள்) செலுத்த வேண்டிய தொழில்வரித்தொகை தொடர்ந்து நிலுவையில் இருந்து வருவது கண்டறியப்பட்டது.<br><br>இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் (ம) வருவாய் உதவியாளர்கள் தங்களது குறிப்பில் புதிய மென்பொருள் முறை வந்த பின்பு அரசு (ம) அரசு துறை நிறுவனங்களுக்கு Group Demand என்ற பெயரில் ஒரு துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அந்த துறை (அ) நிறுவனத்தின் பெயரிலேயே தொழில்வரிக்கான இரசீதானது, ஒரே இரசீதாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த புதிய மென்பொருள் முறை வருவதற்கு முன்னர், சஅரசு (ம) அரசு துறை பணியாளர்களுக்கு, தொழில்வரி தனி நபர் கேட்பு எழுப்பப்பட்டு தனி நபர் இரசீது வழங்கப்பட்டு வந்தமையால், அந்த தனிப்பட்ட தனிநபர் கேட்புகள் தற்போது வரை தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது எனவும், தொழில்வரி இனங்களில் (Traders) கடைகளுக்கு உள்ள கேட்புத்தொகையில், கடைகளை காலி செய்தோர் (ம) தற்போது இல்லாத கடைகள், இருமுறை பதிவாகியுள்ள கடைகளுக்கான வரித்தொகைகளும் தொடர்ந்து நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். இதனால் இந்நகராட்சி தொழில்வரி நிலுவைத் தொகையாக ரூ.9398153/- உள்ளது. இத்தொகைக்கான தனிநபர் விபரப் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்ட விபரப்படி. அரசு பணியாளர்களின், தனிநபர் கேட்புகள் (ம) தற்போது இல்லாத கடைகள், இருமுறை பதிவாகியுள்ள கடைகள், கடைகளை காலிசெய்தோர் போன்ற பட்டியலில் உள்ள தொழில்வரி நிலுவைத் தொகையினை வசூல் செய்ய முடியாத இனங்களாக கருதி ரூ.9398153/- க்கான நிலுவையினை தொழில்வரி கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>(இணைப்பு - பட்டியல்)<br><u>தொழில்வரி அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் தனி நபர்களுக்கான நீக்கல் பட்டியல்</u>
<table>
<tr><th>வ. எண்</th><th>வார்டு எண்கள்</th><th>வரிவிதிப்பு எண்ணிக்கைகள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>1</td><td>3</td><td>8538</td></tr>
<tr><td>2</td><td>2</td><td>211</td><td>980466</td></tr>
<tr><td>3</td><td>4</td><td>50</td><td>173344</td></tr>
</table></td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 334 | 1342976 |
| 5 | 6 | 9 | 54651 |
| 6 | 7 | 22 | 45345 |
| 7 | 9 | 60 | 279852 |
| 8 | 10 | 49 | 188752 |
| 9 | 11 | 10 | 45441 |
| 10 | 12 | 28 | 129855 |
| 11 | 13 | 58 | 292722 |
| 12 | 14 | 5 | 23845 |
| 13 | 15 | 37 | 176453 |
| 14 | 16 | 2 | 9538 |
| 15 | 18 | 1 | 3596 |
| 16 | 19 | 398 | 2361599 |
| 17 | 21 | 52 | 313278 |
| 18 | 27 | 1 | 4769 |
| 19 | 29 | 205 | 596115 |
| 20 | 31 | 7 | 33383 |
| 21 | 32 | 17 | 81073 |
| | **மொத்தம்** | 1559 | 7145591 |

**தொழில்வரி வணிக நிறுவனங்களின் நீக்கல் பட்டியல்**

| வ. எண் | வார்டு எண்கள் | வரிவிதிப்பு எண்ணிக்கைகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 5 | 37 | 95848 |
| 2 | 7 | 11 | 87827 |
| 3 | 9 | 70 | 206501 |
| 4 | 10 | 7 | 19618 |
| 5 | 11 | 231 | 805762 |
| 6 | 12 | 70 | 185124 |
| 7 | 13 | 60 | 306307 |
| 8 | 14 | 2 | 25835 |
| 9 | 17 | 8 | 49884 |
| 10 | 18 | 1 | 743 |
| 11 | 19 | 208 | 348122 |
| 12 | 20 | 14 | 32838 |
| 13 | 21 | 15 | 42149 |
| 14 | 28 | 1 | 507 |
| 15 | 29 | 11 | 11974 |
| 16 | 30 | 1 | 743 |

| | | |
|---|---|---|
| | | |

| | | | |
|---|---|---|---|
| 17 | 31 | 7 | 8369 |
| 18 | 33 | 11 | 24411 |
| | **மொத்தம்** | **765** | **2252562** |

**அலுவலகக்குறிப்பு : -**

தொழில்வரி இனத்தில் உள்ள தொடர் கேட்பு நிலுவைகளை அவசர அவசியம் கருதி சரி செய்யும்பொருட்டு பட்டியலில் உள்ள வரிவிதிப்பாளர்களின் கேட்பு நிலுவைகளை மட்டும் நீக்கம் செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 9560 /2008/அ3**

| | | | |
|---|---|---|---|
| **36** | 828 | நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர்இ சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் இவ்வலுவலக காலியிடவரி இனத்தில் நிலுவையாக ரூ.96.97 இலட்சம் உள்ளதற்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும் இவ்வளவு பெரும் தொகை நிலுவையாக உள்ளதற்கு என்ன காரணம் எனக் கண்டறிந்து நிலுவைத்தொகையினை வசூல் செய்யவும்இ கேட்புத்தொகை ஏதும் நீக்கம் செய்யப்பட வேண்டியிருப்பின் அதனை நீக்கம் செய்துஇ தள்ளுபடி செய்து அடுத்து வரும் ஆய்வுக்கூட்டத்தில் தவறாது அறிக்கை சமர்ப்பிக்கத் தெரிவிக்கப்பட்டது. | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |

எனவே சொத்துவரி விதிக்கப்பட்ட கட்டத்தின் இடத்திற்கான காலியிடவரி நீக்கம் செய்யப்படாமல் தொடர்ந்து கேட்பு வருவதாலும்இ காலியிடத்திற்கான மனை எண் குறிப்பிடப்படாமல் கேட்பு எழுப்பப்பட்டுள்ளதால் அக்காலியிடங்களை கண்டறிய இயலாமல் உள்ளதால் கேட்பு வசூல் செய்ய இயலாத காரணத்தினாலும்இ மூலதன மதிப்பில் மிக்குறைவாக வரிவிதிப்பு செய்யப்பட்ட காலியிடங்களுக்கு மேற்கூறிய காரணங்களாலும் காடலியிட வரி தொடர்ந்து நிலுவையுள்ளதாகவும் உள்ளது. எனவே பட்டியலில் கண்டுள்ள 803 வரிவிதிப்பு எண்களுக்குரிய தொகை ரூ.61இ68இ298/- நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பட்டியல் சுருக்கம்**

| வ. எண் | வார்டு எண்கள் | வரிவிதிப்பு எண்ணிக்கைகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 13 | 3 | 12912 |
| 2 | 14 | 90 | 519423 |
| 3 | 28 | 50 | 316858 |
| 4 | 130 | 7 | 23669 |
| 5 | 33 | 48 | 322053 |
| 6 | 7 | 49 | 543476 |
| 7 | 8 | 9 | 48604 |
| 8 | 9 | 13 | 183602 |
| 9 | 11 | 1 | 1362 |
| 10 | 22 | 49 | 141626 |
| 11 | 23 | 42 | 244879 |
| 12 | 26 | 0 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 13 | 1 | 11 | 36537 |
| | | | 14 | 2 | 66 | 492018 |
| | | | 15 | 3 | 88 | 672548 |
| | | | 16 | 4 | 57 | 656874 |
| | | | 17 | 10 | 6 | 244641 |
| | | | 18 | 24 | 4 | 4551 |
| | | | 19 | 25 | 4 | 2274 |
| | | | 20 | 6 | 50 | 512943 |
| | | | 21 | 15 | 58 | 342341 |
| | | | 22 | 19 | 4 | 11684 |
| | | | 23 | 27 | 4 | 49255 |
| | | | 24 | 32 | 2 | 7164 |
| | | | 25 | 05 | 58 | 640180 |
| | | | 26 | 16 | 02 | 949 |
| | | | 27 | 17 | 01 | 789 |
| | | | 28 | 20 | 07 | 46653 |
| | | | 29 | 21 | 01 | 1428 |
| | | | 30 | 29 | 12 | 44242 |
| | | | 31 | 31 | 07 | 42763 |
| | | | | **மொத்தம்** | **803** | **6168298** |

அலுவலகக்குறிப்பு — மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண் 712 / 2019/ அ2)**

| | | | |
|---|---|---|---|
| **37** | 829 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வடக்கு குட்டை வீதி, சதாசிவம் வீதி, தங்கம்மாள் ஓடை ஆகிய வீதிகளில் ஒவ்வொரு வருடமும் மாரியம்மன் கோயிலின் தேரோட்டம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட சாலைகள் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளால் சேதமடைந்துள்ளமையால் தேர் செல்ல உகந்ததாக இல்லாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.753 நாள்: 14.12.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 21.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,<br>1. மெசர்ஸ் செல்லியம்மன் அன் கோ, கோவை : மதிப்பீட்டை விட **4.99** % அதிகம்<br>2. திருமதி.வி.மீனாள், தேவகோட்டை : மதிப்பீட்டை விட **9.98** % அதிகம்<br>எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் வழங்கிய மெசர்ஸ் செல்லியம்மன் அன் கோ, கோவை அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்டதில் விலைக் குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். எனவே மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.<br>**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண் 3178/2018/இ1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |
| **38** | 830 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சொத்துவரி, காலியிட வரி , தொழில்வரி, குத்தகை இனம், குடிநீர் கட்டணம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் ஆகிய இனங்களுக்குரிய தொகைகளை செலுத்தக்கோரும் விளம்பரத்தினை ஆட்டோவில் ஒலிபெருக்கி வைத்து 30 நாட்களுக்கு விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காண் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>வ.எண் \| ஒப்பந்தப்புள்ளி கோரியவர் விபரம் \| தொகை (நாள் ஒன்றுக்கு) | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>குமரன் சவுண்ட்ஸ்</td><td>ரூ.2000/-</td></tr>
<tr><td>2.</td><td>சாந்திநாதன் சவுண்ட்ஸ்</td><td>ரூ.1900/-</td></tr>
<tr><td>3.</td><td>மணி வர்த்தக விளம்பரம்</td><td>ரூ.1750/-</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மணி வர்த்தக விளம்பர விலைப்புள்ளித்தொகை ரூ.1750/- குறைவாக உள்ளதால் இதனை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண் 3369/2013/அ2
</td>
<td></td>
</tr>
</table>

(ஒப்பம்) ஒ. ராஜாராம்,
ஆணையாளர் / தனி அலுவலர்

**ஆணையாளர்**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**